

தகவல் தொழில்நுட்பப் பணியாளர்கள் பிரிவு
அறம்சார்!
அறிவுசார்!
நாம் தமிழர் கட்சி

# தகவல் தொழில்நுட்ப பணியாளர்கள் பிரிவு செய்தி மடல்

*மே 2019*

திபி 2050 . மலர் 1 . இதழ் 2



## நாம் தமிழர் கட்சி

# பதிப்புரை

## இவ்விதழில்


1. தமிழக அரசின் பட்ஜெட் அலசல்
2. தகவல் தொழில் நுட்பமும், தற்சார்பும்
3. நன்றிது தேர்ந்திடல் வேண்டும்!
4. தமிழ் தேசியமும் கூட்டாட்சி முறையும்
5. ஆதங்கம் - கவிதை


"இலட்சியத்தால் ஒன்றுபட்டு எழுச்சி கொண்ட மக்களை எந்த ஒரு சக்தியாலும் ஒடுக்கிவிட முடியாது." - தலைவர் பிரபாகரன்

2019 இந்தியப் பொதுத் தேர்தல் நடந்துமுடிந்துள்ளது. மக்கள் மத்தியில் நாம் தமிழருக்கு பெருகிவரும் செல்வாக்கு கண்கூடாகத் தெரிகிறது . எனினும் நம்மீது திட்டமிட்டு சமூக ஊடகங்களில் நடத்தப்பட்டுவரும் பொய்ப்பிரச்சாரங்களை நாம் எச்சரிக்கையாகக் கவனிக்கக் வேண்டியுள்ளது. நம்மை பிற்போக்குவாதிகள் போலவும் பழமைவாதிகள் போலவும் சித்தரிக்கக் கடும் முயற்சிகள் நடந்துவருகின்றன. இத்தகைய சவால்களை முறையாகக் கையாள வேண்டிய பெரும்பொறுப்பு தகவல் தொழில்நுட்ப பணியாளர்கள் பிரிவாகிய நமக்கு உள்ளது. கருத்துகளை கருத்துகளால் எதிர்கொள்ள வேண்டும். போலி தமிழ் தேசியவாதிகளை அடையாளம் காணவேண்டும். தடைகளைத் தாண்டி நாம் தமிழர் வெல்லும்.

வெல்லப்போறான் விவசாயி !

ஆசிரியர் குழு

**தமிழக அரசின் பட்ஜெட்டும் (2019-2020)**


**நாம் தமிழர் கட்சியின் வரைவு அறிக்கையும்**


வேலை வாய்ப்பு, சுற்றுசூழல் பாதிப்பு , சிறுகுறு தொழில்கள் மூடல் வேளாண்மை பாதிப்பு நீர் தட்டுப்பாடு தொழில்துறை தேக்கம், தற்சார்பு பொருளாதாரம் நலிவு, தொழில்துறை தேக்கம் ஆகிய சவால்களை தமிழகம் எதிர்நோக்கி இருக்கும் வேலையில் தமிழக அரசின் 2019-2020 வருடத்திற்கான பட்ஜெட் மாண்புமிகு தமிழக நிதித்துறை அமைச்சர் அவர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த பட்ஜெட் தமிழகத்தை அடுத்த நிலைக்கு எடுத்துச்செல்வதற்கான முன்னேற்பாடாக உள்ளதா அல்லது வழக்கம்போல ஏமாற்றமே மிஞ்சுகிறதா என பார்ப்போம்.

"தமிழக வரவு செலவு அறிக்கை மிகவும் ஏமாற்றமளிப்பாதகவும், இப்போதுள்ள உலகப் பொருளாதாரச் சூழ்நிலையில் பெரும் வாய்ப்புத் தவறவிடலாகவும் உள்ளது."

**தமிழக அரசு வரவு**






**வேளாண்மை**

தமிழகத்தின் ஒரு வருட அரிசித் தேவை மட்டும் 90 லட்சம் டன். நம் உற்பத்தி வெறும் 60 லட்சம் டன் மட்டுமே. 30 லட்சம் டன் இறக்குமதி செய்து கொண்டிருக்கிறோம்.

நுண்ணுயிர் பாசனம்( 1361 கோடி ), கூட்டுப் பண்ணை ( 101 கோடி ) ஆகியவற்றுக்கு இந்த பட்ஜெட்டில் தமிழக அரசு பணம் ஒதுக்கியுள்ளது வரவேற்கத்தக்கது. எனினும் அது மிகச் சொற்பம். தமிழகத்தில் மொத்தம் 60 லட்சம் எக்டர் வேளாண் நிலம் உள்ளது. வெறும் 2 லட்சம் எக்டர் ( 3% ) நிலங்களுக்கு மட்டுமே இது செய்யப்படவுள்ளது.

இயற்கை உழவு பற்றியோ, பாரம்பரிய உழவு பற்றியோ எந்தப் பேச்சும் இல்லாதது பெரும் ஏமாற்றம்.

வழக்கம்போல உழவரின், வேளாண்மையின் பிரச்சனைகளைத் தீர்க்காமல்

கடன்- வட்டி தள்ளுபடி மட்டுமேத் தீர்வாக வைக்கப்படுகிறது.

இயற்கை வேளாண்மை மூலம் இடுபொருள் விலைக் குறைத்தல், விளைவித்தப் பொருட்களுக்கு நல்ல விலையைக் கிடைக்கச் செய்தல், மதிப்புக்கூட்டப்பட்ட பொருள் உற்பத்தியே நிரந்தர, சரியானத் தீர்வு. அதையே நாம் தமிழர் கட்சி வலியுறுத்துகிறது.

## கால்நடை வளர்ப்பு

கிராமப்புற பொருளாதாரத்தை வலுப்படுத்த கால்நடை வளர்ப்பின் முக்கியத்துவத்தை நாம் தமிழர் வலியுறுத்திவருகிறது. இது, முன் விமர்சிக்கப்பட்டும் வந்தது. இந்த வருடம் தமிழக அரசு நாட்டுக்கோழி வளர்ப்பு ( 50 கோடி ), நாட்டு மாடு வளர்ப்புக்கு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது நாம் தமிழர் கட்சியின் தொலைநோக்குப் பார்வையைக் காட்டுகிறது.

## கடல் வளம்

தமிழகம் இந்தியப் பெருங்கடலில் மிக முக்கிய இடம் வகிக்கிறது. கடல்சார் வாணிகம் தொட்டே தமிழரின் ஏற்றம் இருந்துள்ளது. கப்பல் கட்டும் தொழில் மற்றும் இதர தொழில்களைப் பற்றி எந்த விடயமும் இந்த வரவு - செலவு அறிக்கையில் இல்லை.




நாம் தமிழர் கட்சி

## தொழிற்துறை

தொழில்துறையில் ஸ்டார்ட்அப் நிறுவனங்கள் அடுத்த மிகப் பெரிய விஷயமாக இந்தியாவில் இருக்கப் போகிறது. அதற்காக எந்த விதமான முன்னெடுப்போம் இந்த பட்ஜெட்டில் இல்லை.

50,000 க்கும் மேற்பட்ட சிறுகுறுந் தொழில்கள் மூடப்பட்டுள்ளன. அதனைப் பற்றியும் ஏதுமில்லை.

தற்சார்பு பொருளாதாரம் இல்லாத எந்த ஒரு சமூகமும் முன்னேறாது என்பது நாம் தமிழர் கட்சியின் அடிப்படைக் கொள்கை.

தமிழகம் இந்தியா விடுதலை அடைவதற்கு முன்பு இருந்தே வங்கி மற்றும் நிதித்துறையில் மிக முக்கியத்துவம் வாய்ந்த ஓர் இடத்தை பெற்றிருந்தது. இந்தியன் வங்கி யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் ஆகியவை தமிழர்களால் ஆரம்பிக்கப்பட்டவை.

ஆனால் வங்கிகள் தேசியமயமாக்கல் ஆனதற்குப் பின்பு அதன் முக்கியத்துவம் மிகவும் குறைந்துள்ளது.

எதிர்காலத்தில் வங்கித் துறை வளர்ச்சி மிக அதிகமாக இருக்கும் என்ற பல்வேறு கணிப்பில் கூறப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல் ஒரு மாநிலம் முன்னேறவும் வங்கிகள் மிக மிக அவசியமானது. முதலீடுகளை ஈர்க்கவும் அது மிகவும் முக்கியத்துவமானது. ஆனால் அதனைப் பற்றி எந்தவிதமான கருத்துகளையும் கூறப்படவில்லை.

நாம் தமிழர் ஆட்சியில், தமிழ் தேசிய வைப்பகம் அமைக்கப்படும் என்பதும் அதன் மூலம் மூலதன இயக்கத்தை அதிகரித்து அதிகமான கடன் வழங்கி அதன்மூலம் முன்னேற்ற முடியும் என்பதும் அளிக்கப்பட்டுள்ளது.( ( கேரளா அரசு தற்போது 'கேரளா வங்கி' அமைக்கவுள்ளது )

## ஆராய்ச்சி

ஆராய்ச்சித்துறை ஒரு நாட்டின் நீண்ட வளர்ச்சிக்கு மிக மிக அவசியமானதாகும். இதன் அவசியத்தையும் முக்கியத்துவத்தையும் உணர்ந்து மேலைநாடுகளில் மொத்த உற்பத்தி இரண்டு சதவிகிதம் தமது ஆய்வு மற்றும் ஆராய்ச்சிக்கு ஒதுக்கப்பட வேண்டும் என வரையறுக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் ஆய்வு மற்றும் ஆராய்ச்சி மிகவும் பின்தங்கி உள்ளது. நம்முடைய கல்வித்துறையும் வேலையாட்களை உற்பத்தி செய்து கொண்டிருக்கிறது தவிர ஆராய்ச்சியாளர்களை உறுதி செய்யும் வகையில் இல்லை. ஆகையால் தமிழக அரசு ஆய்வு மற்றும் ஆராய்ச்சிக்கு அதிகளவான பணம் ஒதுக்கீடு செய்து அதனை ஊக்குவிக்க வேண்டும்.

இந்த பட்ஜெட்டில் அதைப்பற்றியான எந்த விஷயமும் இல்லை இது மிக மிக ஏமாற்றத்தை தருகிறது நாம் தமிழர் கட்சியில் தமிழக மரபு சார்ந்த தமிழகத்தை சார்ந்த இந்த மண் சார்ந்த ஆராய்ச்சிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் என கூறப்பட்டுள்ளது. இதன் மூலம் வேளாண்மை உள்ளிட்ட துறைகளில் அதிகமான வளர்ச்சியை நாம் பெற இயலும்.

தமிழக அரசு வெளிநாட்டு நிறுவனங்களை வரவேற்பதும் தொழில்நுட்பங்களை இறக்குமதி செய்து தற்சார்பு பொருளாதாரத்தை ஒழிப்பதே இவர்களின் நோக்கமாக உள்ளதே தவிர அதை முன்னேற்றம் அடையச்செய்வதற்கான எந்த ஏற்பாடும் இல்லை

## தகவல் தொழில்நுட்பம்

தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்ப மேலாண்மை அரசு நிர்வாகத்தில் மிக முக்கிய பங்கை ஆற்றி வருகிறது. நமது அண்டை மாநிலங்களில் இதற்காக அதிக முக்கியத்துவம் தரப்படுகிறது. ஆந்திர மாநிலத்தில் முதலமைச்சரின் இணையதளத்தில் எரியும் தெருவிளக்கின் நிலையைக் கூட அறிய முடியும் அந்த அளவு துல்லியமாக செயல்படுத்தியுள்ளனர்.

தமிழகம் இதில் மிக மிகப் பின்தங்கி உள்ளது.



இந்த பட்ஜெட்டில் தகவல் தொழில்நுட்பத்திற்கான பணம் ஒதுக்கீடு மிக மிக குறைவு. சர்வர் பண்ணை என்பதற்காக மட்டுமே சிறிய அளவிலான பணம் ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும் ஊழலையும் லஞ்சத்தையும் ஒழிப்பதிலும் அரசு பணிகளை விரைவாக செய்வதிலும் தகவல் தொழில்நுட்பத்தின் பங்கு மிகப்பெரியது. இதன் ஆற்றலை உணர்ந்து பிற மாநிலங்களும் மத்திய அரசும் மிக விரைவாக இதில் செயலாற்றிக் கொண்டுள்ளன.

மேலும் பேரிடர் காலத்தின் போது தகவல்களை பரிமாறும் மிக முக்கியமான தேவையாக தொழில்நுட்பம் உள்ளது. அதற்காகவும் பெரிதாக எதுவும் பட்ஜெட்டில் ஒதுக்கப்படவில்லை.

இ-கவர்னன்ஸ் எனப்படும் மின் ஆளுகை என்பதன் முக்கியத்துவம் பற்றி நமது வரைவு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு நாம் செய்வதன் மூலம் நேரடியாக மக்களுக்கு சேவையாற்ற முடியும். லஞ்சம் ஊழல் போன்றவற்றையும் குறைக்க முடியும். எடுத்துக்காட்டாக மத்திய அரசு கடவுச்சீட்டு அலுவலகம் முழுவதும் கணினிமயமாகி உள்ளது. முன்பு ஊழல் மலிந்து கிடந்த அந்த துறையில் தற்போது ஊழல் மிகவும் குறைந்துள்ளது இதைப்போலவே நாம் தமிழர் ஆட்சியில் பிறப்பு சான்றிதழ் தொடங்கி இறப்பு சான்றிதழ்கள் அனைத்தையும் மின் ஆளுகை மூலம் செயல்படுத்தப்படும்.

அந்த வகையில் இந்த பட்ஜெட் மிக மிக ஒரு ஏமாற்றம் தெரிந்தது எதிர்காலத்தில் இது தமிழகத்தை மிக அதிக அளவில் பாதிக்கும்.

## மின்துறை

தமிழகம் கடந்த பத்தாண்டுகளாகவே கடுமையான மின் தட்டுப்பாட்டை சந்தித்து வருகிறது. வளர்ச்சிக்கும் தொழில் துறை முன்னேற்றத்திற்கும் விவசாயத்திற்கும் மின்சக்தி தற்போது மிக மிக அவசிய தேவையாக உள்ளது.

தமிழகம் மிக அதிகமான சூரிய ஒளி மின்சக்தி உற்பத்தி செய்வதற்கான திறனை தன்னகத்தேக் கொண்டுள்ளது.

எனினும் இந்த பட்ஜெட்டிலும் வழக்கம்போல நிலக்கரி இறக்குமதி செய்து தயாரிக்கப்படும் அனல் மின்நிலையத்துக்கே அதிகம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழகம் மொத்தமாக 91,330 கோடிக்கு ( 13000 மெவா )அனல் மின் திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது. உலக அளவில் நிலக்கரி மின் உற்பத்தியின் விலை அதிகரித்து வருகிறது. எனவே எதிர்காலத்தில் மின் விலை அதிகரிக்கும். மேலும் தமிழக அரசையும் பெரும் கடனாளியாக்கும்.

பல பொருளாதார ஆய்வு அறிக்கைகள் இத்திட்டத்தின் பொருளாதார கணக்கீடுகளை கேள்விக்குள்ளாக்கியுள்ளன. எனினும் இத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.


நீர் நிலைகளின்மேல்
சூரியஒளி மின் உற்பத்தி

தமிழகத்தில் 40,000 க்கும் அதிகமான ஏரி குளங்கள் உள்ளன சிவகங்கை ராமநாதபுரம் புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் மட்டும் 1815 பெரிய ஏரிகள் உள்ளன. இந்த ஏரிகளில் 10 சதவிகிதம் இடங்களில் மிதவை மின் தகடுகள் அமைத்தாலே 15,000 மெகாவாட் மின் உற்பத்தித் திறனை பெற முடியும். இதன்மூலமே ஒவ்வொரு கிராமமும் மின் உற்பத்தி பூங்காவாக மாறும்

### போக்குவரத்து துறை

தமிழக அரசு போக்குவரத்து துறை ஒரு ஆண்டுக்கு ஏறத்தாழ 8000 கோடி ரூபாய் நஷ்டத்தை அளித்து வருகிறது. எடுத்துக்காட்டாக சென்னை மாநகர போக்குவரத்து கழகம் ஆண்டுதோறும் 500 கோடி ரூபாய் நஷ்டம் அடைந்தது..

புதிய மின்பேருந்துகள் வரவேற்கத்தக்க விட்யம் எனினும் அது போதுமானதாக இல்லை.

நாம் தமிழர், எந்தெந்த இடங்களில் சாத்தியமானதோ அந்தந்த இடங்களில் நீர்வழிப் போக்குவரத்து டிராம் ஆகியவற்றையும் செயல்படுத்தும்.

தமிழகம் அதிகமான மக்கள் தொகையைக் கொண்டுள்ள ஒரு மாநிலமாகும். 8 வழி சாலை 16 வழி சாலை ஆகியவை ஒரு போதும் நம் தேவையை நிறைவுசெய்யப் போவதில்லை.

இங்கு சாலை போக்குவரத்து விட ரயில் போக்குவரத்து என்பது மிகமிக முக்கியத்துவமானது.

ரயில் போக்குவரத்து தமிழகத்தில் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளது என்பது அனைவரும் அறிந்ததே. அதனை விரிவுபடுத்த மத்திய அரசுடன் பேசியோ அல்லது மெட்ரோ ரயில் போன்றவற்றை விரிவுபடுத்தி மற்ற நகரங்களுக்கும் கொண்டு செல்லவோ எந்தவிதமான முன் ஏற்பாடும் இந்த பட்ஜெட்டில் செய்யப்படவில்லை. இதன் மூலம் எதிர்காலத்தில் மிக நெருக்கடியான போக்குவரத்து சவால்களை சந்திக்க வேண்டி வரும் என்பது கண்கூடு

கோவை, மதுரை, திருச்சி, திருப்பூர், சேலம் ஆகிய நகரங்களைவிடகொச்சி சிறிய நகரம். அங்கு நடுவண் அரசின் உதவியோடு மெட்ரோ இரயில் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு இல்லை. குறைந்தபட்சம் புறநகர் கூட இல்லை

### சுற்றுலாத்துறை

தமிழகம் மிக முக்கியமான சுற்றுலா மாநிலமாக திகழ்கிறது. பனி மற்றும் பாலை தவிர அனைத்தையும் பெற்று இயற்கை வளங்கள் நிறைந்த மாநிலமாக தமிழகம் உள்ளது. எனினும் சுற்றுலா துறையை மேம்படுத்துவதற்காக மிகக்குறைவாகவே ( 186 கோடி ) இந்த பட்ஜெட்டில் கொடுக்கப்பட்டுள்ளது.

நாம் தமிழர் வரைவறிக்கையில் சுற்றுலாத்துறையின் முக்கியத்துவம் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## வளர்ச்சிப் பரவல்

தமிழகத்தின் அனைத்து பகுதிகளும் சமமான வளர்ச்சி பெற வேண்டும். ஒரு பகுதி மட்டும் ஏற்படும் வளர்ச்சி என்பது வீக்கம். இதனை நாம் தமிழர் கட்சி உணர்ந்துதான் கிராம பொருளாதாரத்தையும் தற்சார்பு பொருளாதாரத்தையும் முன்னேற்றிக் கொண்டு வரவேண்டும் என்பதை அடிப்படையாகக் கொண்டுள்ளது.
இரண்டாம் கட்ட நகரங்களில் வளர்ச்சி ஏற்படுவது மிக மிக முக்கியமானதாகும். இதன்மூலம் தலைநகரில் இடநெருக்கடி குறைவது மட்டுமல்லாமல் வளர்ச்சி பரவலாக்கப்படும். எனவே இரண்டாம் கட்ட நகரங்களான ஓசூர், சேலம், கோயம்புத்தூர், திருச்சி ஆகியவற்றின் நகரங்களின் வளர்ச்சியில் அதிக கவனம் செலுத்த வேண்டும். ஆனால் அதனைப் பற்றிய எந்தவிதமான பெரிய அளவிலான திட்டம் இல்லை.

நாம் தமிழர் கட்சி ஆட்சிக்கு வந்தால் இரண்டாம் கட்ட நகரங்கள் அதிகளவு வளர்க்கப்படும் அத்தனை துறைகளிலும் முன்னேற்றம் ஏற்படுத்தப்படும். இதன் மூலம் மக்கள் முன்னேற்றமும் சாத்தியப்படும்

மொத்தத்தில் தமிழக வரவு செலவு அறிக்கை மிகவும் ஏமாற்றமளிப்பாதகவும், இப்போதுள்ள உலகப் பொருளாதாரச் சூழ்நிலையில் பெரும் வாய்ப்புத் தவறவிடலாகவும் உள்ளது.

ஒரு தொலைநோக்குப் பார்வையும் இல்லாமல் உள்ளது இந்த வரவு செலவு அறிக்கை.

## பொதுத்துறை நிறுவனங்கள்

டாஸ்மாக் ஒன்றைத் தவிர பெரும்பாலான பொதுத்துறை பெரும் நட்டத்தையே சந்தித்து வருகின்றன. இதனை சரிக்கட்ட எந்த நடவடிக்கையும் இல்லை.

வங்கி, தொலைத்தொடர்பு, கப்பல் போக்குவரத்து, காப்பீடு ஆகியவற்றில் தமிழக நிறுவனங்கள் பெரிதாக ஒன்றும் இல்லை. அவற்றில் தமிழகப் பொதுத்துறை நிறுவனங்களை ஏற்படுத்தினால் பல வேலைவாய்ப்புகளை நேரடியகவும் மறைமுகமாகவும் அளிக்க முடியும். தற்சார்ப்பு பொருளாதாரத்தையும் நிறுவ முடியும்.

.

## திவாலை நோக்கி தமிழகம்?

2019-2020 இல் தமிழகத்தின் மொத்த கடன் 3,97,495 கோடி ரூபாயாக இருக்கும். இது தமிழகத்தின் மொத்த உற்பத்தியில் 23%. இதற்கு வட்டி மட்டும் ஆண்டுக்கு 33,226 கோடி ஆகிறது.

மொத்த உற்பத்தியில் 25% க்கு மேல் கடன்பெற இயலாது. இந்த வருடம் 43,000 கோடி கடன் பெறப்படவிருக்கிறது. இதைத் திருப்பிச் செலுத்துவதற்கான எந்தத் திட்டமும் இருப்பதாகவும் தெரியவில்லை. எழமுடியாத பள்ளத்தை நோக்கித் தமிழ் மக்கள் தள்ளப்பட்டுக் கொண்டுள்ளனர்.

தமிழகத்தில் உள்ள ஒவ்வொருவரின் தலையிலும் ( குழந்தை உட்பட ) 50,000 ரூபாய் கடன் வாங்கப்பட்டுள்ளது. இந்தப் பணமெல்லாம் எங்கே சென்றது என்பதே நம் முன்னுள்ள பெரிய கேள்வி.

- அறிவரன் பா

தமிழ்தொழில்நுட்பம் தற்சார்பு பொருளாதாரத்திற்கு நேர் எதிரானதா? எதிரியா?

இந்தக் கேள்விக்கு அனேகமாக அனைவருடைய பதிலும் ஆமாம் என்பதாகவே இருக்கும். இந்தத் துறை சார்ந்தவர்களுக்கு கூட அதே புரிதல் தான் என்பதே கசப்பான உண்மை.

அப்படிப்பட்ட தவறான புரிதலுக்கு என்ன காரணம்? தகவல் தொழில்நுட்பம் உலகமயமாக்கலின் ஊடாகவே இந்த மண்ணிற்குள் ஊடுருவியதின் காரணமாகவோ என்னவோ உலகமயமாக்கலின் மேல் ஏற்பட்ட அதே வெறுப்பு இத்துறையின் மீதும் படிந்து போனது.

தற்சார்பு என்பது ஒரு குறிப்பிட்ட துறைச்சார்ந்ததல்ல. தேவையான ஒவ்வொரு துறையிலும் தற்சார்பு அடைவதே உண்மையான தற்சார்பாக இருக்கமுடியும்.

ஆனால் பெரும்பாலானோர் தற்சார்பு என்றாலே அது உழவுத்தொழில் மட்டுமே என்கிற தவறாக எண்ணத்தில் இருப்பதே உண்மை. தகவல் தொழில்நுட்பத் துறையில் பணிபுரிபவர்களில் கூட சிலர் எப்படியாவது சில ஏக்கர் வேளாண் நிலங்களை வாங்கி இயற்கை வேளாண் இலக்காக வைத்துள்ளனர்..

தகவல் தொழில்நுட்பத் துறையும் இரு வழிகளில் தற்சார்பு பொருளாதாரத்தை வலுப்பெறச் செய்ய முடியும்

1. அனைத்துத் துறைசார்ந்த சிறு குறு தொழில் முனைவோர் மற்றும் உழவர்களுக்கான தகவல் தொழில்நுட்பத்தை உருவாக்குவது மட்டும் அந்த தொழில்நுட்பம் அவர்களைச் சென்றடைய செய்வது

2. தகவல் தொழில்நுட்பத் துறையில் தன்னிறைவு அடைவது / தகவல் தொழில்நுட்பத் துறை பொருளாதாரத்தை நமக்கானதாக மாற்றுவது

உங்கள் முதலீடு தகவல் தொழில்நுட்பத் துறைகளிலும் இருக்கட்டும், தமிழர்கள் தலை சிறந்த தகவல் தொழில்நுட்ப பணியாளர்கள் என்கிற இந்த நிலையில் இருந்து தமிழர்கள் தகவல் தொழில்நுட்பத்துறையை ஆள்பவர்கள் என்ற நிலையை எட்ட வேண்டும்
ஒரு தமிழர் உலகின் தலைசிறந்த தொழில்நுட்ப நிறுவனத்தின் தலைமைச் செயலாளர் என பெருமை கொள்வதை விட தமிழகத்தில் சிறு அளவிலான நிறுவனங்களையாவது தாங்களே தொடங்கி மேற்கூறியவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும்

- சண்முகம்

மிகப்பழம் பெருமையும் வரலாறும் தன்னகத்தே கொண்ட ஒரு மொழி இனம் காலவெள்ளத்தில் நசுக்கப்பட்டு, அழிக்கப்பட்டு கிட்டத்தட்ட தன் முடிவு நிலையை அடைகின்ற தருவாயில் நம் மொழி, பண்பாடு, இலக்கியம், வாழும் முறைமையை காக்க காலம் கையளித்த கடைசி வாய்ப்பு நமது இயக்கம்.

இயற்கையானது தனக்கு தீங்கு நேரிடும் போதெல்லாம் தன்னை தகவமைத்துக் கொள்ள தாமே தற்காப்பு வளையத்தை கட்டமைத்துக் கொள்ளும் என நமக்கு போதிக்கிறார் நமது பெறுந்தகப்பன் வேளாண் பெருங்குடியோன் ஐயா நம்மாழ்வார் அவர்கள்.


அதுபோல இவ்வுலகிற்கு அனைத்தையும் கற்பித்த போதித்த ஒரு மூத்த மொழி, இனம் தன்னை தகவமைத்துக் கொள்ள கட்டமைக்கப்பட்டதே நாம் தமிழர் இயக்கம். இது வெறும் கட்சி அல்ல மாறாக நமது பிறப்பின் அடையாளம் பெருமை. இன்றைய அரசியல் சூழலில் நமது மொழி, இனம்,பண்பாடு காக்க நாம் மிக மிக அவசியமாகிறோம். பண்பாட்டுப் புரட்சி இல்லாது அரசியல் புரட்சி வெல்லாது என்பது
நமது நிலைப்பாடு அதுபோலவே வெறுமனே தேர்தல் அரசியலுக்காகவும் அதிகாரத்திற்காகவும் வளர்க்கப்பட்ட கட்சி அல்ல நாம், அதனால்தான் அனைத்து
உயிர்களுக்குமான அரசியல் பேசிக் கொண்டிருக்கிறோம், செய்து கொண்டிருக்கிறோம். இன்றைய சூழலில் ஏதொரு இயக்கமும் கட்சியும் சூழலியல் பற்றியும் மற்ற
உயிரினங்கள் பற்றியும் பேசாது. நாமே அதை பற்றி கவலை கொள்கிறோம், சிந்திக்கிறோம். ஏனெனில் நாம்தான் இந்த மண்ணுக்கும், மக்களுக்கும் ஆனவர்கள்.

இங்கே இயற்கை வேளாண்மை பற்றியும் அதன் அவசியம் குறித்தும் கொள்கை வார்த்த ஒரே
இயக்கமும் நாம்தான்.
இயக்கமானது இன்று எதிரிகள் அஞ்சும் நிலைக்கு வளர்ந்து நிற்கிறது. நாள்தோறும்
வளர்கிறது.
இன்றைய சூழலில் இளைஞர்கள் அதிகமாக இணைகின்ற ஓர் இயக்கமாகவும் நாம் தமிழர் இயக்கம் இருக்கிறது. ஒரு குரல் நம் அனைவரையும் தட்டி
எழுப்பி தமிழெழுனும் உணர்வில் கூடச்செய்தது. அந்தக் குரலை கிளையில் இருந்து
வேர்வரை பரப்பிக் கொண்டு சேர்க்க வேண்டியது நமது கடமை கட்டாயம்.
வாள்முனையை விட கோல்முனை வலிமையானது தான்

வெறும் மாய எழுத்தினால் 50 வருடம் நம்மை ஏமாற்றி கொளுத்துப் பெருத்தார்கள். காரணம் நமது அறியாமையின் மடமையின் தேர்வுதான். இனியும் ஒருபோதும் அனுமதியோம். அதற்கே மகாகவி நன்றிது தேர்ந்திடல் வேண்டும் என்கிறான்.

உன் கூற்றுப்படியே நன்றிது தேர்ந்தெடுத்தோம் - பாரதி,

இனி நடப்பது நன்று இருக்கவே!




தீங்குறு பகைவரை இவனின்று நீக்குவோம்.

இலக்கு ஒன்றுதான் இனத்தின் விடுதலை

இனியும் பேசுவோம் தமிழ் வெல்லும்.

**- வீரம்மா செல்லமகன்.**

## தமிழ்தேசியமும் கூட்டாட்சி முறையும்

தன்னாட்சி உரிமை என்பது ஒவ்வொரு தேசிய இனமும் தனித்து தேசிய அரசு அமைத்துக் கொள்வதற்கான உரிமையாகும் .இந்தியா பல தேசியங்களின் கூட்டமைப்பு . இங்கு தன்னாட்சி உரிமை ,மொழிவழி தேசியமாக அமைந்துள்ளது. எனினும் நடைமுறையில் அவ்வாறு இல்லை. தற்சமயம் உலக நாடுகளில் இந்தியாவில் தான் அதிகமான வர்க்கச் சுரண்டல் நடைபெறுகிறது . தமிழ்நாட்டு வேலை தமிழருக்கே என்று கூறுமளவிற்கு ஒரு சாராரின் ஆதிக்கம் வலுவாக உள்ளது.

“நாம் தமிழர் அனைத்து மொழிவழி தேசிய இனங்களுக்கும் அவர்களது மண் சார்ந்த அரசியலை ,தன்னாட்சி உரிமையை , பகிர்ந்தளித்தலை வலியுறுத்துகிறது.”

தவிர கார்பரேட் அரசியல் இன்று பலவாறு நம்மை அடிமைப்படுத்த முயலுகிறது. கலாச்சார ஏகாதிபத்தியம் , ராணுவ ஏகாதிபத்தியம் , பொருளாதார ஏகாதிபத்தியம் என்று நம்மீது ஏவப்படுகிறது. இவற்றை எதிர்ப்பது தனித்த தேசியங்களால் இயலாத ஒன்று. தேசியகட்சிகள் அனைத்து மாநிலங்களுக்கும் ஒரே கொள்கையுடன் பயணிக்கிறதா என்றால் ,இல்லை என்பதே உண்மை. அது ஒரு மொழிவழி இனத்திற்கு மட்டுமே சாதகமாக செயல்படுகிறது.

இதைதான் நாம்தமிழர் எதிர்க்கிறது. நாம் தமிழர் அனைத்து மொழிவழி தேசிய இனங்களுக்கும் அவர்களது மண் சார்ந்த அரசியலை நிலத்திற்கு ஏற்றார் போல் தன்னாட்சி உரிமையை பகிர்ந்தளிதலை வலியுறுத்துகிறது. மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் தன்னாட்சி என்ற தத்துவத்தை முன்வைக்கிறது நமது அரசியல்.

பிரிந்து கிடக்கும் நமது தமிழ் சமூகம் முதலில் தமக்குள் வேற்றுமை இன்றி ஒன்றிணைய வேண்டும்.

தந்தை பெரியார் அவர்கள் ",ஒரு பெரும் சமூகம் ஒற்றுமையும் சீர்திருத்தமும் பெற வேண்டுமானால் அதிலுள்ள பிரிவுகளான ஒவ்வொரு சிறு சமூகமும் தங்களுக்குள் , சீர்திருத்தத்தையும் பெற்றாக வேண்டியது மிகவும் , முதலில் ஒற்றுமையையும் ,"அவசியமாகும்என்று கூறியுள்ளதைப்போல.

இணைவோம் நாம் தமிழராக.... - ஜெகதீஷ் ச. உலகுடையான்.

# தேர்தல் களம்

நடைபெற உள்ள பாராளுமன்றத் தேர்தலில் நாம் தமிழர் கட்சிக்கு வலு சேர்க்கும் பொருட்டு தகவல் தொழில் நுட்பப் பணியாளர்கள் பிரிவின் சார்பாக 08/04/2019 அன்று பழைய மகாபலிபுர சாலையில் உள்ள சிறுசேரி, நாவலூர் பகுதிகளில் உள்ள முக்கிய வணிக வளாகங்களின் முன் நாம் தமிழர் கட்சியின் செயற்பாட்டு வரைவை உள்ளடக்கிய துண்டறிக்கை பரப்புரை இன்று மாலை 5 மணி முதல் இரவு 9 மணி வரை சிறப்பாக நடைபெற்றது.



நமது பிரிவின் சார்பிலான துண்டறிக்கை பரப்புரை 08/04/2019 அன்று காலை 8 மணி முதல் 9 மணி வரை மகேந்திரா சிட்டி-பரனூர் ரயில் நிலையத்திலும் , மாலை 7.30 மணி முதல் 9.00 வரை பழைய மகாபலிபுர சாலையில் உள்ள சோழிங்கநல்லூர் சந்திப்பிலும் சிறப்பாக நடைபெற்றது.



நமது பிரிவின் சார்பிலான துண்டறிக்கை பரப்புரை 09/04/2019 அன்று காலை 8 மணி முதல் 9 மணி வரை மகேந்திரா சிட்டி பேருந்து நிறுத்தத்திலும் , மாலை 7.30 மணி முதல் 9.30 வரை பழைய மகாபலிபுர சாலையில் உள்ள துரைப்பாக்கம்-சென்னை ஒன் வளாகம்



நமது பிரிவின் சார்பிலான துண்டறிக்கை பரப்புரை 11/04/2019 அன்று மாலை 4.30 மணி முதல் 6.00 மணி வரை போரூர் DLF தகவல் தொழில் நுட்ப வளாகத்திலும் , 7.30 மணி முதல் 9.30 வரை சென்னை Tidel பூங்கா, திருவான்மியூர் ரயில் நிலையம் அருகிலும் நடைபெற்றது



நமது பிரிவின் சார்பிலான துண்டறிக்கை பரப்புரை 13/04/2019 அன்று மாலை 4.00 மணி முதல் 5.30 மணி வரை சென்னை ஃபீனிக்ஸ் வணிக வளாகத்திலும் , 6.00 மணி முதல் 7.00 மணி வரை கிண்டி ரயில் நிலையப் பகுதிகளிலும் நடைபெற்றது.



நமது பிரிவின் சார்பிலான துண்டறிக்கை பரப்புரை 14/04/2019 அன்று மாலை 4.30 மணி முதல் 6.00 மணி வரை சென்னை கந்தன்சாவடி (பெருங்குடி) பகுதியிலும் , 8.30 மணி முதல் 9.30 மணி வரை பழைய மகாபலிபுர சாலை மெரினா மால் வணிக வளாகத்திலும் சிறப்பாக நடைபெற்றது.



# ஆதங்கம்

மதுரை (சதீசு) குமார்

ஒரு நாள்...
உன் மகனும் வீடிழப்பான்..
உன் பேரனும் வேலையிழப்பான்..
உன் மொழியும் பரிதவிக்கும்..
அன்று சொல்ல முனைவாயோ
எல்லோரும் இந்தியர் என்று..?

யாதும் ஊரே, யாவரும் கேளிர்; என்றவர் நாம்..
அது பொருட்டு என்வீட்டில்
எனக்குரிமையில்லை,
என்பது கொடுமையல்ல, கயமை..

நிலம் எமது; வரி எமது; கட்டியெழுப்பியது நாம்..
ஆனால், எம்மக்கட்கு கல்வியில்லை;
அவர் மக்கட்கு பணியில்லை;
எம்மொழிக்கு இடமில்லை..
ஏற்றுக்கொள் இதையென்றால்,
இளித்தாவாயன் நானா.?

ஏற்க மறுத்தால் இனவெறியன் தானா.?
பாருக்கு வேதம் தந்த இனத்திற்கு,
பண்பு சொல்லுமுன் கேள் உன் மனசாட்சியை;
இது நீதி தானா என்று..!

எல்லோரும் சமமாக இருந்தால்தான் அது நாடு..
இல்லையேல் நரியும் பரியும் வாழும் வெறும் காடு...



"எல்லோரும் சமமாக இருந்தால்தான் அது நாடு.."